(4) பங்களூர், மல்லீசுவரத்தில் மதுரை உழவர்கள் தாக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, டாக்டர் ஹாண்டே, அவர்கள் விதி 41-ன்கீழ் அவசரப் பொது முக்கியமான ஒரு விஷயத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ்

'1970-ம் ஆண்டு சனவரி திங்கள், 31-ம் நாள் சனிக்கிழமையன்று பங்களூர், மல்லீசுவரத்தில் ஆயிரம் பேர்கொண்ட கூட்டமொன்றினால் மதுரையைச் சேர்ந்த உழவர்கள் தாக்கப்பட்டது குறித்து அவசரப் பொது முக்கியமான காரியத்தை' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மதுரையைச் சேர்ந்த 61 உழவர் பெருமக்கள் தமிழ்நாட்டிலிருந்து சிறுலாப் பேருந்து ஒன்றில், சிறுலா சென்றனர். அவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து 1970 ஜனவரித் திங்கள் 31-ஆம் நாள் சனிக்கிழமையன்று பங்களூர், மல்லிசுவரத்தில் கன்னடியக் கிளர்ச்சிக்காரர்களால் தாக்கப்பட்டது. உழவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மல்லிசுவரத்தை அடைந்தபொழுது, சுமார் 1,000 பேர் கொண்ட கூட்டத்தினர் அப்பேருந்தை வளைத்துக்கொண்டு "திவிர விவசாயிகள் சுற்றுலா" என்று தமிழில் எழுதப்பட்ட துணிக்கொடியைத் துண்டு துண்டாகக் கிழித்து எறிந்தனர். கிளர்ச்சிக்காரர்கள் பேருந்தின்மீது கற்களை வீசிக் கண்ணாடிச் சாளரங்களை உடைத்தனர். அதனால் சில பிரயாணிகளுக்குக் காயங்கள் ஏற்பட்டன. மேலும் அவர்கள் அந்த வண்டியை எரித்துவிடுவதாகவும் அச்சுறுத்தினர். ஆயினும், அக்குடியானவர்கள் தப்பி ஓடி மல்லீசுவரம் காவல் நிலையத்தை அடைந்து அங்கு புகார் ஒன்றைத் தாக்கல் செய்தனர். முதலுதவிச் சிகிச்சை பெற்ற பின்னர், அவர்கள் சென்னைக்குத் திரும்பினர். இச்சம்பவத்தில் நான்கு குடியானவர்களுக்கும் காயம் ஏற்பட்டது.

இக்குடியானவர்களில் சிலர் மேற்சொன்ன நிகழ்ச்சியை விவரித்து 1970, பெப்ரவரி 2-ஆம் நாளன்று சென்னையில் முதலமைச்சரிடம் முறையீடு ஒன்றைக் கொடுத்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் 3—2—1970 அன்று மைசூர் முதலமைச்சருக்கு எழுதிய நேர்முகக் கடிதத்தில் மேற்சொன்ன நிகழ்ச்சி பற்றிச் குறிப்பிட்டுள்ளார். மைசூரிலுள்ள தமிழர்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பளிக்கவும், மக்களிடையே அன்பும், அமைதியும் வளரும் இயல்பான நிலை மீண்டும் நிலவவும் அவசியமான நடவடிக்கைகளை மைசூர் முதலமைச்சர் எடுத்திருப்பார் என்ற நம்பிக்கை அதில் தெரிவிக்கப்பட்டது.

DR. H. V. HANDE : Was the reply given by the Chief Minister of Mysore ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மைசூர் முதல்வரிடம் இருந்தும் பதில் வந்தது. அங்குள்ளவர்களுக்குப்போதுமான பாதுகாப்பு அளிக்கப்படும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் பதில் வந்திருக்கிறது.

(ஆ) மைசூர் மாநிலத்திற்குச் சென்ற தமிழர்களின் பேருந்து தாக்கப் பட்டதும், மைசூர் வாழ் தமிழர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் **குறித்து**

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ்—

'தமிழகத்திலிருந்து அண்மையில் மைசூர் மாநிலத்திற்குச் சென்ற தமிழர்கள் பேருந்துவைத் தாக்கிச் சேதப்படுத்தியதுபற்றியும் மைசூர் மாநிலத்தில் பல்லாண்டுகளாகக் குடியேறி, வாழ்ந்தும் வருகின்ற தமிழர் களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும்' என்கிற அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: திருப்பத்தூருக்கும் பங்களூருக்கும் இடையே ஓடும் எம்.எஸ்.ஆர். 8755 எண்ணுள்ள தமிழ்நாடு அரசுப் போக்கு வரத்துப் பேருந்து, 1---2---1970-ல் பெங்களூரில் ஏற்பட்ட கலவரத்தின் காரண மாக 2---2---1970-ம் நாளன்று மைசூர் மாநில எல்லைக்குள் அமைந்த அத்திப் பள்ளி என்னுமிடத்தில் பயணிகளை இறக்கிவிட்டு விட்டு ஓசூர் நோக்கித் திரும்பிவந்து கொண்டிருந்தது. மைசூர் மாநில எல்லைக்குள் பயணிகளை இப் பேருந்து ஏற்றிக் கொள்ளக்கூடாதென்று பேருந்துந் தரகர்கள் தடை செய் தனர். கறுப்புக்கொடி தாங்கிய ஒருவர் இப்பேருந்து நகர்ந்துகொண் டிருக்கும் போது அதன் முன்னால் படுத்துக்கொண்டார்; மற்றும் இருவர் பேருந்தின் முட்டுத் தாங்கியில் (Bumper) ஏறி உட்கார்ந்துகொண்டனர். அவர்களுக்கு அறிவுரை கூறித் திருத்த வலவர் முயன்று கொண்டிருந்த போது, அருகிலிருந்த திராட்சைத் தோட்டத்திலிருந்து கலகக்காரர்கள் சிலர் ஓடிவந்து பேருந்துமீது கற்களை வீசினர்; இதனால் ரூ. 300 மதிப்புள்ள முகப்புக் கண்ணாடி சேதமடைந்தது. எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 147, 336, 427-வது பிரிவுகளின்கீழ், இது சம்பந்தமாக ஓசூர் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு (குற்றம்) எண் 30/70 பதிவு செய்யப்பட்டது; அதிகார வரம்பு காரணங்காட்டி, இந்த வழக்கு மைசூர் மாநிலத்திலுள்ள சர்ஜாபூர் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, மைசூர் மாநிலத்தில் வாழ்கிற தமிழர்களைத் தாக்க அங்கே தனியாக ஒரு அணி இருப்பதாகச் சொல்லப் படுகிறதே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தனியாக இருப்பது அணி அல்ல. ஒரு பிணி.